**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**நாள். 4.10.2018 புதன்கிழமை    நேரம் : காலை 10.00 மணி**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 4.10.2018

**பொருள்: 1**

உசிலம்பட்டி நகராட்சியில் வார்டு–22, பேரையூர் ரோடு, பொது மயானத்தில் நுண்ணிய உரமாக்கும் பணிக்கு ரூ. 60.00 இலட்சத்திற்கு மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 26.9.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்றது

1.திரு. பி.காட்டுராஜா, உசிலம்பட்டி
2.திரு.சி.திருமூர்த்தி, உசிலம்பட்டி

மேற்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதியினை இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளரால் 26.9.2018 அன்று பரிசீலனை செய்யப்பட்டதில் ஒருவரின் திரு.பி.காட்டுராஜா என்பவரின் தொழில்நுட்ப தகுதியை ஏற்று மட்டும் ஒப்பந்ததாரர் மற்றொருவரான திரு. சி.திருமூர்த்தி என்பவரின் தொழில்நுட்ப தகுதி இல்லாததால் அவரது ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. எனவே, திரு. பி.காட்டுராஜா ஒப்பந்ததாரரின் Price-bid–யை தகுதியுள்ளதாக்கி 3.10.2018 அன்று நேரில் ஆஜராகும்படி தெரிவிக்கப்பட்டு Price-bid–திறக்கப்பட்டதில் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டுத்தொகையை விட 8.40 சதவிகித அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தார். மேலும். 3.10.2018 அன்று மாலை 3.00 மணிக்கு பேச்சு வார்த்தைக்கு அழைத்ததில் மேலும் விலைக்குறைப்பு செய்ய பேச்சு வார்த்தையின் இறுதியில் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டுத்தொகைக்கு பணி செய்ய ஒப்புக்கொண்டதையும் மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:–**
1.மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 1**    **நாள் : 4.10.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி